செ.வெ.எண்: 26 /ஜூன் நாள் : 12.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## இந்திய இராணுவப்பணி மற்றும் குடிமைப்பணிகளில் பணியாற்றி உயிர்நீத்த முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு இராணுவ குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடிமைப்பணி ஓய்வூதியம் என இரண்டு ஓய்வூதியங்களும் வழங்கிட உத்தரவிட்டுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இந்திய இராணுவப்பணி மற்றும் குடிமைப்பணிகளில் பணியாற்றி உயிர்நீத்த முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கும் இராணுவ குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடிமைப்பணி ஓய்வூதியம் என இரண்டு ஓய்வூதியங்களும் வழங்கிட வேண்டும் என தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வூதியத்துடன் படைப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்கள், பின்னர் மறுவேலைவாய்ப்பு அடிப்படையில் குடிமைப் பணியில் வேலைவாய்ப்பு பெற்று, ஓய்வு பெறும் பொழுது குடிமைப்பணிக்கான ஓய்வூதியம் மற்றும் இராணுவப்பணி ஓய்வூதியம் என இரு விதமாக ஓய்வூதியங்கள் பயனடைந்து வருகின்றனர்.

இவ்வாறு ஓய்வூதியம் பெற்று வரும் முன்னாள் படைவீரர்கள் உயிர்நீத்த பிறகு, முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு இராணுவ குடும்ப ஓய்வூதியம் அல்லது குடிமைப் பணியில் பணியாற்றியமைக்கான குடும்ப ஓய்வூதியம் என ஏதாவதொரு ஓய்வூதியம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு தற்போது, மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஓய்வூதியங்களும் பெற்று உயிர்நீத்த முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு இராணுவ குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடிமைப் பணி ஓய்வூதியம் என இரண்டு ஓய்வூதியங்களும் வழங்கப்படும் என உத்தரவிட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி 01.04.2003-க்கு முன்பு, குடிமைப்பணியில் மறு வேலைவாய்ப்பு பெற்று பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின்பு ஓய்வூதியம் பெற்றுள்ள முன்னாள் படைவீரர்களின் குடும்பங்களுக்கு இது பொருந்தும். எனவே, இராமநாதபுரம் மாவட்டத்தினைச் சார்ந்த குடிமைப்பணியில் ஓய்வு பெற்ற முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் முன்னாள் படைவீரர்கள் பணியாற்றிய சம்பந்தப்பட்ட குடிமைப்பணி துறையினை (Civil Employment Department) அணுகி குடும்ப ஓய்வூதியம் குறித்தான கருத்துரு மாநில கணக்காயர் அவர்களுக்கு பரிந்துரை செய்து பயனடையலாம்.

அவ்வாறு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்ட விவரம் தொடர் நடவடிக்கை எடுத்திட ஏதுவாக இராமநாதபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்திற்கு உடன் தெரிவிக்கும்படியும் இது குறித்து மேலும் விவரங்கள் அறிய இராமநாதபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அவர்களை 04567-230045 என்ற தொலைபேசி மற்றும் நேரிலும் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**